தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:

94436 99066

namadhudhinakani@gmail.com

www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 93 | 4 Pages | 3.11.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 93 | 4 பக்கங்கள் | 3.11.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**

**ஏமப் புணையைச் சுடும்**

**விளக்கம்:**

**சினம் என்னும் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பு ஒருவனுக்கு இனம் இன்பத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.**

# எல்லை போராட்ட தியாகிகளை நினைவு கூர்ந்த முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ.3

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்தனது எக்ஸ்வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

தெற்கிலும் வடக்கிலும் பல இடங்களில் போராடி தமிழ்நாட்டின் எல்லையைக் காத்த மாவீரர்களின் தியாகத்தைப் போற்றும் நாள், நவம்பர் 1.

தமிழர் வாழும், தமிழ் பேசப்படும் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காகப் போராடிய அனைவரையும் எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளில் போற்றி வணங்குகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜார்க்கண்டில் நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 3.6 ஆக பதிவு



ராஞ்சி, நவ.3

ஜார்க்கண்ட் மாநிலத்தின்தலைநகர்ராஞ்சியில்இருந்து 35கி.மீ. தொலைவில் உள்ள குந்தி மாவட்டத்தில், இன்று காலை 9.20 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.6 ஆக பதிவாகி உள்ளதாக தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தநிலநடுக்கம்காரணமாகஉயிர்சேதமோஅல்லதுபொருள்சேதமோ ஏற்படவில்லை. நிலநடுக்கத்தின் மையமானது தரைமட்டத்தில் இருந்து சுமார் 5 கி.மீ. ஆழத்தில் அமைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜார்க்கண்டில் உள்ள ஜாம்ஷெட்பூர் மற்றும் கந்த்ரா உள்ளிட்ட பகுதிகளிலும் இன்று நில அதிர்வு உணரப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# என்எல்சி ஒப்பந்த தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபடக் கூடாது சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு







சென்னை, நவ.3

என்.எல்.சி. நிர்வாகத்துக்கும், ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் இடையேயான பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை குழுவை அணுக அறிவுறுத்திய சென்னை உயர் நீதிமன்றம், அதுவரை போராட்டத்தில் ஈடுபடக் கூடாது என உத்தரவிட்டுள்ளது.

பணி நிரந்தரம் உள்ளிட்ட 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி என் எல்சி ஒப்பந்த தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதை எதிர்த்து என்.எல்.சி நிறுவனத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், இந்த விவகாரம் தொடர்பாக, மத்திய தொழிற் தீர்ப்பாயத்தில் நிலுவையில் உள்ள வழக்கை விரைந்து விசாரித்து முடிக்க வேண்டுமென உத்தரவிட்டது. மேலும், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள என்.எல்.சி. நிர்வாகம் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் இடையேயான பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் ஆறு மாதங்களில் உயர் மட்டக் குழு அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து என்.எல்.சி. நிர்வாகம் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ் மற்றும் எம்.ஜோதிராமன் அமர்வில் விசாரணைக்கு வந்தது.


அப்போது, தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்ய வேண்டுமெனவும், தொழிலாளர்கள் போராட்டத்திற்கு தடை விதிக்க வேண்டுமெனவும் என்.எல்.சி. நிர்வாகம் தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

ரூ 24.50 கோடி மோசடி! பாஜக வேட்பாளர் தேவநாதன் யாதவ்வின் ஜாமீன் மனு தள்ளுபடி! ஹைகோர்ட் அதிரடி

இதையடுத்து, பிரச்சனை தொடர்பாக இரு தரப்பும் பேச்சுவார்த்தை குழுவை அணுக உத்தரவிட்ட நீதிபதிகள், அதுவரை போராட்டத்தில் ஈடுபட தொழிலாளர்களுக்கு தடை விதித்து உத்தரவிட்டனர்.

மேல்முறையீட்டு மனுவுக்கு பதிலளிக்கும்படி , ஒப்பந்த தொழிலாளர்கள் சங்கத்துக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை நவம்பர் 13ம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.

## காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் துப்பாக்கி சூடு ; 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை



ஸ்ரீநகர், நவ.3

காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள ஹல்கன் காலி பகுதி அருகே இன்று பாதுகாப்பு படையினர் மற்றும் பயங்கரவாதிகள் இடையே துப்பாக்கிசண்டை வெடித்தது. இந்த மோதலில் பயங்கரவாதிகள் 2 பேர் சுட்டுக்கொல்லப்பட்டதாக பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட 2 பயங்கரவாதிகளில் ஒருவர் வெளிநாட்டவர் என்பதும், மற்றோரு நபர் உள்ளூரைச் சேர்ந்தவர் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பதை கண்டறிவதற்கான விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அந்த பகுதியில் பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

இதே போல், ஸ்ரீநகரின் கன்யார் பகுதியிலும் பாதுகாப்பு படையினர் மற்றும் பயங்கரவாதிகளிடையே துப்பாக்கி சண்டை நடந்து வருகிறது. இந்த மோதலில் இதுவரை இரு தரப்பிலும் உயிரிழப்பு ஏற்பட்டதாக தகவல் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தீபாவளி கொண்டாட்டம்.. சாஃப்ட்வேர் இன்ஜினியருக்கு ஷாக் கொடுத்த கொள்ளையர்கள்.. கோவையில் பரபரப்பு

கோவை, நவ.3

கோவை மாவட்டம், வழியாம்பாளையம் கிராமத்தில் மென்பொருள் பொறியாளரின் வீட்டின் கதவை உடைத்து 118 சவரன் நகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளசம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் குறித்து கோவில்பாளையம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மாநிலத்தில் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. ஆன்லைன் திருட்டு, ஆஃப்லைன் திருட்டு, பண்டிகை கால திருட்டு என புதுப்புது ரூட்டுகளில் திருட்டு, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். பொதுமக்களுக்கு காவல் துறையினர் மற்றும் சைபர் கிரைம் போலீஸார் சார்பில் இதுதொடர்பாக தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஆனாலும், இது போன்ற சம்பவங்களில் பொதுமக்கள் சிக்குவது வாடிக்கையாவிட்டது. அந்த வகையில், தீபாவளி கொண்டாட்டத்துக்காக கோவையில் இருந்து பொள்ளாச்சி சென்ற சாஃப்ட்வேர் இன்ஜினியரின் வீட்டுக்குள் புகுந்து 1118 சவரன் தங்கம் மற்றும் வைர நகைகளை மர்மநபர்கள் கொள்ளையடித்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோவை மாவட்டம், கோவில்பாளயத்தை அடுத்துள்ளது வழியாம்பாளையம் கிராமம். இப்பகுதியில் இவா என்ற பெயரில் வில்லா குடியிருப்புகள் உள்ளன. இந்த வில்லாவில் பாலசுப்பிரமணியன் என்பவர் தனது மனைவி சுதாவுடன் வசித்து வருகின்றார். சாஃப்ட்வேர் இன்ஜினியரான பாலசுப்பிரம ணியம் அந்த துறையில் இருந்து வெளியே வந்து, தற்போது பொள்ளாச்சிஅருகேபுரவிபாளையம் பகுதியில் விவசாயம் செய்து வருகிறார். இந்நிலையில், தீபாவளி கொண்டாட்டத்துக்காக கடந்த 30 ஆம் தேதி மனைவி சுதாவுடன், பொள்ளாச்சி அருகே உள்ள புரவிபாளையம் பகுதியில் உள்ள தோட்டத்திற்கு வீட்டிற்கு சென்றுள்ளார். தீபாவளியை சிறப்பாகக் கொண்டாடி முடித்துவிட்டு இன்று அதிகாலை வழியாம்பாளையத்தில் உள்ள வீட்டுக்குத் திரும்பினார்.

அப்போது, வீட்டின் கதவைத் திறந்தபோது அவருக்கு காத்திருந்தது அதிர்ச்சி. வீட்டின் பின்புற கதவு உடைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. வீட்டுக்குள் சென்று பார்த்தபோது மர பீரோவில் வைக்கப்பட்டிருந்த நெக்லஸ், கம்மல், காசு மாலை, வளையல், மோதிரம், பிரேஸ்லெட், செயின் என 118 சவரன் தங்க நகைகளும், 75 கேரட் வைர நகைகளும் திருட்டுப் போயிருந்தது தெரியவந்தது.

இதுகுறித்து, பாலசுப்பிரமணியன் கோவில்பாளையம் காவல் நிலையத்துக்குச் சென்று புகார் அளித்தார். புகாரின்பேரில், கோவில்பாளையம் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த கொள்ளை சம்பவம் குறித்து தகவலறிந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் மற்றும் உயர் அதிகாரிகள் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டனர். மேலும் சம்பவ இடத்தில் பதிவாகியுள்ள கைரேகைகள் பதிவு செய்யப்பட்டதுடன், மோப்ப நாய்கள் வர வைக்கப்பட்டு தேடுதல் பணி நடத்தப்பட்டது.

இதேபோல, அதே பகுதியில் மயில்சாமி என்பவரது வீட்டிலும் கதவை உடைத்து உள்ளே கொள்ளையர்கள் சென்றிருப்பதும், அங்கு விலை மதிப்புள்ள பொருட்கள் இல்லாததால் திருட்டு நடைபெறவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

இந்த கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட நபர்களை பிடிக்க 5 தனிப் படைகள் அமைக்கப்பட்டு கோவில்பாளையம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மத்திய மந்திரி ஜெய்சங்கர் ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் பயணம்



புதுடெல்லி, நவ.3

மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் வரும் 3ந்தேதி முதல் 8ந்தேதி வரை அரசு முறை சுற்றுப்பயணமாக ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

இதன்படி முதலில் ஆஸ்ரிரேலியாவிற்கு செல்லும் அவர், அங்குள்ள பிரிஸ்பேன் நகரில், ஆஸ்திரேலியாவில் அமைக்கப்பட்டுள்ள 4வது இந்திய தூதரகத்தை திறந்து வைக்க உள்ளார். பின்னர் கான்பெர்ரா நகரில் ஆஸ்திரேலியாவின் வெளியுறவுத்துறை மந்திரி பென்னி வாங்குடன் இணைந்து, 15வது வெளியுறவு மந்திரிகளின்கட்டமைப்புஉரையாடல் (FMFD) நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

அதைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவின் நாடாளுமன்றத்தில் ஜெய்சங்கர் உரையாற்ற உள்ளார். அதோடு ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர், தொழில்துறையினர், ஊடக அமைப்பினர் மற்றும் அந்நாட்டு மந்திரிகளை சந்தித்து கலந்துரையாட உள்ளார்.

இதன் பிறகு 8ந்தேதி சிங்கப்பூர் செல்லும் மத்திய மந்திரி ஜெய்சங்கர், அங்கு நடைபெறும் 8வது ஆசியான்(ASEAN) வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார். பின்னர் அந்நாட்டின் அரசியல் தலைவர்களை சந்தித்து, இந்தியாசிங்கப்பூர் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

## சூரசம்ஹாரத்தை முன்னிட்டு திருச்செந்தூருக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கம்

தூத்துக்குடி, நவ.3

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூர் முருகன் கோவிலில் ஆண்டுதோறும் கந்தசஷ்டி திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அதன்படி திருச்செந்தூரில் இந்த ஆண்டு கந்தசஷ்டி திருவிழா நாளை(சனிக்கிழமை) தொடங்குகிறது.

2ம் நாள் முதல் 5ம் நாள் வரையிலும் தினமும் அதிகாலை 3 மணிக்கு நடை திறக்கப்பட்டு, விஸ்வரூப தீபாராதனை, உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடைபெறும். விழாவின் சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம், 6ம் நாளான 7ந் தேதி (வியாழக்கிழமை) நடக்கிறது. மாலை 4.30 மணிக்கு சுவாமி ஜெயந்திநாதர் கடற்கரையில் எழுந்தருளி சூரபத்மனை வதம் செய்யும் சூரசம்ஹாரம் நடக்கிறது.

இதனைக் காண தமிழகத்தின் பல்வெறு பகுதிகளில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் திருச்செந்தூருக்கு வருகை தருவார்கள். இதனை முன்னிட்டு, திருச்செந்தூருக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக, வரும் 6ந்தேதி சென்னை, சேலம், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் பெங்களூருவில் இருந்து திருச்செந்தூருக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து 7ந்தேதி திருச்செந்தூரில் இருந்து சென்னை, சேலம், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் பெங்களூரு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. பயணிகள் www.tnstc.in இணையதளம் மற்றும் tnstc ஆப் மூலம் டிக்கெட்டுகளைமுன்பதிவுசெய்து கொள்ளலாம்எனஅரசுவிரைவு போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.



விழுப்புரம் மாவட்டம். வல்லம் ஒன்றியம். சொரத்தூர் ஊராட்சியில் சொரத்தூர் பசுமை தமிழகம் இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சங்கம் சார்பாக 1000 மரக்கன்றுகள் நடும் விழா நேற்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. இந்த ஊராட்சியில் உள்ள பள்ளி வளாகம், பேருந்து நிலையம், சாலையில் இரு பக்கங்களிலும் மாமரம்,தென்னை மரம்,பலாமரம், நிலவேம்பு,நாவல் மரம்,புளியமரம் உள்ளிட்ட 10 வகையான மரக்கன்றுகள் நடப்பட்டது. இந்நிகழ்வில் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு ஆர்வத்துடன் மரக்கன்றுகள் நட்டனர்.

தினகனி



# தமிழகத்தில் 17 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு: கன்னியாகுமரி, நெல்லைக்கு எச்சரிக்கை

சென்னை, நவ.3

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:



தமிழ்நாட்டில் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்காக நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்கான பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட இருப்பதாகவும் புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையிலேயே போட்டித் தேர்வுகள் நடத்தப்படும் என்றும் பள்ளிக்கல்வித் துறை அறிவித்திருக்கிறது. முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தை திட்டமிட்டே தாமதப்படுத்தும் நோக்கத்துடன் எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவு கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் கடைசியாக கடந்த 2021ம் ஆண்டுதான் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கான போட்டித்தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்டு சுமார் 2 ஆயிரம் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டனர். கடந்த 3 ஆண்டுகளாக ஆள் தேர்வு அறிவிக்கைகள் வெளியிடப்படாத நிலையில் 2024ம் ஆண்டு மே மாதத்தில் ஆள் தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்டு ஆகஸ்ட் மாதத்தில் போட்டித்தேர்வுகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் மே மாதம் முடிவடைந்து ஆறு மாதங்களாகியும் ஆள் தேர்வு அறிவிக்கை வெளியிடப்படவில்லை.

முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கான போட்டித்தேர்வுகளுக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ள நிலையில் வரைவுப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்படுவதற்கு குறைந்தது ஓராண்டு ஆகும். அதன் பின்னர் போட்டித்தேர்வு அறிவிக்கப்பட்டு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மேலும் ஒன்றரை ஆண்டுகள் ஆகும். அதன்படி பார்த்தால் 2021 முதல் 2026 வரை காலியான இடங்களுக்கு புதிய முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படமாட்டார்கள். இது உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் கல்வியை கடுமையாக பாதிக்கும்.

முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கான போட்டித்தேர்வுகளின் பாடத்திட்டத்தை மாற்றியமைப்பதை பாட்டாளி மக்கள் கட்சி குறைகூறவில்லை. மாறாக பாடத்திட்டத்தில் திருத்தம் செய்யப்படும் காலத்தைத்தான் விமர்சிக்கிறது. கடைசியாக 2021ம் ஆண்டு முதுநிலை பட்டதாரி ஆசிரியருக்கான போட்டித்தேர்வு அறிவிக்கப்பட்டு இன்றுவரை மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. இந்த மூன்று ஆண்டுகளில் பாடத்திட்டத்தை மாற்றியிருக்கலாம். அதை விடுத்து அடுத்த போட்டித் தேர்வு அறிவிக்கப்படவிருக்கும் வேளையில் பாடத்திட்டத்தை மாற்ற இருப்பதாக கூறுவதை ஆசிரியர்கள் நியமனத்தை தாமதிக்கும் முயற்சியாகவே பார்க்க வேண்டி உள்ளது.

ஏற்கனவே இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான உதவி பேராசிரியர் பணிக்கான போட்டித் தேர்வுகள் அறிவிக்கப்பட்டு பல் வேறுநிலைகளில் முடங்கி கிடக்கின்றன. இப்போது பாடத்திட்ட மாற்றத்தை காரணம் காட்டி முதுநிலை பட்டதாரி ஆசிரியர் நியமனத்தையும் தாமதப்படுத்துவதை ஏற்க முடியாது. எனவே முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கான ஆள் தேர்வு அறிவிக்கையை உடனடியாக வெளியிட்டு அனைத்து காலியிடங்களையும் நிரப்ப ஆசிரியர் தேர்வு வாரியமும் தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதியில் திடீர் வெள்ளம்

விருதுநகர், நவ.3

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ராக்காச்சி அம்மன் கோவில் உள்ளது. இன்று தீபாவளி மறு நாள் விடுமுறை தினம் என்பதால், அருகில் உள்ள பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் பலர் கோவிலுக்கு சென்றுவிட்டு அங்குள்ள ஆற்றில் குளிக்கச் சென்றனர்.



இந்த நிலையில் திடீரென அந்த பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதையடுத்து கோவிலுக்குச் சென்ற பெண்கள் உட்பட சுமார் 150 பக்தர்கள் திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக சிக்கித் தவித்தனர். பின்னர் இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற ராஜபாளையம் தீயணைப்புத் துறையினர் அங்குள்ளவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

# "எங்க லட்சியத்திற்கு எதிராக யார் வந்தாலும் எதிரி தான்..": விஜய்யை கடுமையாக விமர்சித்த சீமான்

சென்னை, நவ.3

தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை நடிகர் விஜய் கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கினார். விஜய் கட்சி தொடங்கியது முதல் அவருக்கு ஆதரவாகவே சீமான் பேசி வந்தார். இந்த சூழலில், கடந்த மாதம் 27ஆம் தேதி தவெக மாநில மாநாடு நடைபெற்றது. அதில் பேசிய விஜய், திராவிடமும் தமிழ் தேசியமும் தங்களது இரு கண்கள் என்று பேசி இருந்தார்.



இந்த நிலையில் சென்னையில் இன்று நடைபெற்ற நாம் தமிழர் கட்சியின் பொதுக்கூட்டத்தில் பேசிய சீமான், விஜய்யை நேரடியாக சாடினார். அவர் பேசும்போது, "அது கொள்கை இல்லை. அழுகிய கூமுட்டை.

ஒரு சாலையில் இடது புறம் நிற்க வேண்டும் அல்லது வலது புறம் நிற்க வேண்டும். நடுவில் நின்றால் லாரி வந்து மோதிவிடும். சினிமாவில் பேசும் பஞ்ச் டயலாக் இது இல்லை தம்பி. நெஞ்சு டயலாக்.

நான் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து சிந்தித்து வந்தவன் அல்ல. கொடும்சிறையில் இருந்து சிந்தித்து வந்தவன். நான் குட்டிக் கதை சொல்பவன் அல்ல தம்பி. வரலாற்றைக் கற்பிக்க வந்தவன். நீங்கள் இனிதான் பெரியார், அம்பேத்கர் எல்லாம் படிக்க வேண்டும். நாங்கள் படித்து அதில் பி. ஹெச்டியே வாங்கி விட்டோம்.

திராவிடமும் தமிழ் தேசியமும் ஒன்றா ப்ரோ. எங்கள் லட்சியத்திற்கு எதிராக பெற்ற தகப்பனே வந்தாலும் எதிரி எதிரி தான் அதில் தம்பியும் கிடையாது, அண்ணனும் கிடையாது. இந்த பூச்சாண்டி எல்லாம் என்கிட்ட காட்ட வேண்டாம். 2026ஆம் ஆண்டு என் ஆட்டத்தை யாராலும் சமாளிக்க முடியாது" என்று கடுமையாக விமர்சனம் செய்தார்.

# ஒரே மேடையில் விஜய், திருமாவளவன்? வெளியான பரபரப்பு தகவல்

சென்னை, நவ.3

கடந்த மாதம் 27ம் தேதி தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் முதல் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்ற அக்கட்சியின் தலைவர் விஜய், தங்களோடு கூட்டணி வைக்கும் கட்சிக்கு ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்கு அளிக்கப்படும் என அறிவித்து கூட்டணிக்கு அழைப்பு விடுத்தார்.



இந்நிலையில் சென்னையில் வரும் டிசம்பர் 6ம் தேதி தனியார் வார இதழ் புத்தக வெளியீட்டு விழாவை நடத்த உள்ளது. இந்த புத்தக வெளியிட்டு விழாவில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், மற்றும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் ஆகிய இருவரும் ஒன்றாக பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அம்பேத்கர் நினைவு நாள் அன்று நடைபெறும் புத்தக வெளியீட்டு விழாவில் திருமாவளவன் புத்தகத்தை வெளியிட விஜய் புத்தகத்தை பெற்றுக் கொள்கிறார். ஏற்கனவே திருமாவளவன் ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்கு வேண்டும் என பேசியிருந்த வீடியோக்களை தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டிருந்தார். இந்த வீடியோ பெரும் பேசு பொருளானது.

இதேபோல் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகியான ஆதவ் அர்ஜுனும் ஆட்சி அதிகாரத்தில் பங்கு வேண்டும் என பேசியிருந்தார். அவரது பேச்சு தி.மு.க. வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியது.

ஆனால் திருமாவளவன் ஆதவ் அர்ஜுன் பேச்சால் தி.மு.க. கூட்டணியில் எந்த பிரச்சனையும் இல்லை என்று கூறியிருந்தார்.

இந்த சூழலில் தமிழக வெற்றிக் கழகம் மாநாட்டில் தி.மு.க.வை ஊழல் கபடதாரிகள் என விஜய் கடுமையாக விமர்சனம் செய்தார். மேலும் திராவிட மாடல் அரசு என்று கூறி மக்கள் விரோத அரசை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சரமாரியாக தாக்கி விஜய் பேசி இருந்தார்.

இந்நிலையில் திமுக கூட்டணியில் உள்ள திருமாவளவன், விஜய்யுடன் ஒரே மேடையை பகிர உள்ளது தி.மு.க. வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தொடர் விடுமுறையை கொண்டாட ஊட்டியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

நீலகிரி, நவ.3

தீபாவளி பண்டிகை நேற்று நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. தீபாவளிக்கு அடுத்த நாளான இன்று தமிழக அரசால் அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து அடுத்த 2 நாட்கள் வார விடுமுறை என்பதால், பொதுமக்கள் தொடர் விடுமுறையை கொண்டாட குடும்பத்தோடு சுற்றுலா தளங்களுக்கு படையெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நிலவும் இதமான காலநிலையை அனுபவிக்கவும்,

இயற்கை காட்சிகளை கண்டு ரசிக்கவும் வெளி மாவட்டங்கள், வெளிமாநிலங்கள் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.



தொடர் விடுமுறையை கொண்டாட ஊட்டியில் குவிந்த சுற்றிலா பயணிகள், அங்குள்ள அரசு தாவரவியல் பூங்கா, பைக்காரா, குன்னூர் சிம்ஸ் பூங்கா உள்ளிட்ட இடங்களை கண்டு களித்தனர். ஊட்டியில் லேசான சாரல் மழை பெய்து வரும் சூழலில், பொதுமக்கள் குடைகளை பிடித்தவாறு அங்குள்ள சுற்றுலா தளங்களை பார்வையிட்டு, புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

# 'சென்னையில் தீபாவளியன்று காற்று மாசு கடந்த ஆண்டை விட வெகுவாக குறைந்துள்ளது' மாசு கட்டுப்பாட்டு வாரியம்

சென்னை, நவ.3

தீபாவளி பண்டிகை நேற்று நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. பொதுமக்கள் புத்தாடைகளை அணிந்து, தங்கள் குடும்பத்தினருடன் பட்டாசுகளை வெடித்தும், நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு இனிப்புகளை வழங்கியும் பண்டிகையை கொண்டாடி மகிழ்ந்தனர்.



இதற்கிடையில் தீபாவளி தினத்தன்று காற்று மாசு ஏற்படுவதை கட்டுப்படுத்த அரசு சார்பில் பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. பட்டாசு வெடிப்பதற்கு நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. அனுமதிக்கப்பட்ட நேரம்தாண்டி பட்டாசு வெடித்ததற்காக சென்னையில் 347 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த 2023ம் ஆண்டு 554 வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இந்த நிலையில், சென்னையில் தீபாவளியன்று காற்று மாசு கடந்த ஆண்டை விட வெகுவாக குறைந்துள்ளது என மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. அதே சமயம், தீபாவளியன்று சென்னை வளசரவாக்கத்தில் 287 என்ற அளவில் காற்றின் தரம் மோசமாக இருந்ததாக மாசு கட்டுப்பாடு வாரியம் தெரிவித்துள்ளது.

அதே போல் ஒலி மாசு, அதிகபட்சமாக நுங்கம்பாக்கத்தில் 78.7 டெசிபல் என்ற அளவிலும், குறைந்தபட்சமாக பெசன்ட் நகரில் 59.8 டெசிபல் என்ற அளவிலும் பதிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இரண்டு நாட்களில் ரூ.438 கோடிக்கு மது விற்பனை

சென்னை, நவ.3

தீபாவளி பண்டிகை, நேற்று முன்தினம் கோலாகலமக கொண்டாடப்பட்டது. முன்னதாக டாஸ்மாக் கடைகளில் வழக்கமான விடுமுறை நாட்களில் சுமார் ரூ.150 கோடிக்கு மது விற்பனை நடைபெறும். ஆனால் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை காலங்களில் விற்பனை அதிக அளவில் இருக்கும்.



இந்நிலையில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இரண்டு நாட்களில் ரூ.438 கோடிக்கு மது விற்பனையாகி உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சென்னையில் கடந்த 30ம் தேதி ரூ.47.16 கோடிக்கும், 31ம் தேதி தீபாவளி அன்று ரூ.54.18 கோடிக்கும் மது விற்பனை செய்யப்பட்டது. அதேபோன்று மதுரையில் 30ம் தேதி ரூ.40.88 கோடி, 31ம் தேதி ரூ.47.73 கோடிக்கும், திருச்சியில் 30ம் தேதி ரூ.39.81 கோடி, 31ம் தேதி ரூ.46.51 கோடிக்கும், சேலத்தில் 30ம் தேதி ரூ.38.34 கோடி, 31ம் தேதி ரூ.45.18 கோடி, கோவையில் 30ம் தேதி ரூ.36.40 கோடி, 31ம் தேதி ரூ.42.34 கோடிக்கும் மது விற்பனை செய்யப்பட்டது.

அதன்படி, தமிழகம் முழுவதும் தீபாவளி பண்டிகையையொட்டி கடந்த 30ம் தேதி ரூ.202.59 கோடிக்கும், தீபாவளி நாளான 31ம் தேதி ரூ.235.94 கோடி என மொத்தம் ரூ.438.53 கோடிக்கு மது விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டை விட ரூ.29.10 கோடி குறைவாகும். கடந்த ஆண்டு (2023) தீபாவளி பண்டிகையையொட்டி அதிகபட்சமாக மதுரை மண்டலத்தில் ரூ.101.04 கோடிக்கு மது விற்பனையாகி இருந்தது. ஆனால் இந்த ஆண்டு மதுரையைவிட சென்னை மண்டலத்தில் அதிகபட்சமாக ரூ.101.34 கோடிக்கு மது விற்பனையாகி உள்ளது.

# தீபாவளி பண்டிகை: இன்று முதல் சென்னைக்கு சிறப்பு பஸ்கள் இயக்கம்

சென்னை, நவ.3

தீபாவளி பண்டிகையை கொண்டாட சென்னையில் வசிக்கும் வெளி மாவட்ட மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்றனர். சென்னையில் இருந்து பஸ், ரயில்கள் மூலம் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சொந்த ஊர் சென்றனர். இதனால், தீபாவளி பண்டிகை முடிந்து சென்னை, வழக்கமான பரபரப்பு இன்றி காணப்படுகிறது. இதனிடையே, சொந்த ஊர் சென்ற மக்கள் சென்னை திரும்ப வசதியாக இன்று முதல் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. இது தொடர்பாக தமிழக அரசின் விரைவு போக்குவரத்து கழகத்தின் மேலாண்மை இயக்குனர் ஆர்.மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தீபாவளி பண்டிகை முடிந்த பின்னர், பிற ஊர்களில் இருந்து சென்னைக்கு வரும் பயணிகளின் வசதிக்காக 2ந்தேதி (இன்று) முதல் 4ந்தேதி வரையில் தினந்தோறும் இயக்கக்கூடிய 2 ஆயிரத்து 92 பஸ்களுடன் 3 ஆயிரத்து 165 சிறப்பு பஸ்களும், பிற முக்கிய ஊர்களிலிருந்து 3 ஆயிரத்து 405 பஸ்கள் என மொத்தம் 12 ஆயிரத்து 846 பஸ்கள் இயக்கப்படும். எனவே, பயணிகள் கடைசி நேர கூட்ட நெரிசலில் பயணிப்பதை தவிர்த்து, தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு காலியாக உள்ள இருக்கைகளில் முன்பதிவு செய்து பயணிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# 21வது கால்நடைக் துல்லிய கணக்கெடுப்பு பணி: கலெக்டர் தகவல்

சிவகங்கை, நவ.3

இந்தியாவில் கால்நடை கணக்கெடுப்பு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படுகிறது. இதுவரை 20வது கால்நடை கணக்கெடுப்புகள் நடைபெற்றுள்ளன. 25.10.2024 முதல் 28.02.2025 வரை 21வது கால்நடை கணக்கெடுப்பு நாடு முழுவதும் துவங்க உள்ளது. சிவகங்கை மாவட்டத்திற்கும் இப்பணி கால்நடை பராமரிப்புத் துறையினரால் விரைவில் தொடங்குகிறது. இந்தப்பணியினை மேற்கொள்ள சிவகங்கை மாவட்டத்தில் 158 எண்ணிக்கை கால்நடை கணக்கெடுப்பாளர்கள் மற்றும் 33 எண்ணிக்கை மேற்பார்வையாளர்களுக்கு நேர்முகப்பயிற்சி மற்றும் களப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

வருவாய் கிராம வாரியாகவும், நகரப்பகுதியில் வார்டு வாரியாகவும் நடைபெறவுள்ள இந்த கணக்கெடுப்பின் மூலம் கிராமம் மற்றும் நகரப்பகுதிகளில் வளர்க்கப்பட்டு வரும் 16 வகையான கால்நடைகளின் எண்ணிக்கை இனம், வயது, பாலினம் போன்ற விவரங்கள் சேகரிக்கப்படும். கால்நடைகளின் எண்ணிக்கையை துல்லியமாக கணக்கு எடுத்தால் தான் கால்நடை பராமரிப்பிற்கான எதிர்கால திட்டங்களை தீட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவை சிறப்பாக செய்ய இயலும். கால்நடைகளுக்கு எதிர்காலத்தில் தேவைப்படும் தீவனம் கால்நடை நோய் தடுப்பூசி கால்நடை மருந்துகள் உற்பத்தி போன்றவற்றை தட்டுப்பாடு இல்லாமல் தயாரிக்க கால்நடை எண்ணிக்கை முக்கியம். வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப கால்நடைகளில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருட்களான பால். பாலாடைக்கட்டி, பன்னீர், தயிர், வெண்ணை, நெய், ஆட்டி இறைச்சி, பிற இறைச்சி முட்டை போன்றவற்றை தட்டுபாடின்றி உற்பத்தி செய்ய கால்நடை கணக்கெடுப்பு மிகமிக முக்கியமானதாகும்.

கால்நடைகளில் இருந்து மனிதர்களுக்கு பரவக்கூடிய விலங்கு வழி தொற்று நோய்களுக்கான ரேபீஸ் எனப்படும்.

வெறி நோய் புருசொல்லா எனப்படும் கருச்சிதைவு நோய், எலிக்காய்ச்சல் எனப்படும் மஞ்சள் காமாலை போன்ற 100க்கும் மேற்பட்ட நோய்களை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் கால்நடை எண்ணிகை அவசியமானது. கடும் மழை, புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களால் கால்நடைகள் பாதிக்காமல் தடுக்கவும், கால்நடைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் உரிய நிவாரணம் அளிக்கவும்,

எனவே, கால்நடை கணக்கெடுப்பாளர்கள் உங்கள் பகுதியில் விவரங்கள் சேகரிக்க வரும்போது அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கி உரிய விவரங்களை அளித்து கால்நடை கணக்கெடுப்புப்பணி துல்லியமாக நடைபெறவும். எதிர்காலத்தில் கால்நடைகள் வளம் மற்றும் நலத்துடன் மனிதர்களுக்கான உணவு பாதுகாப்பு மற்றும் திட்டமிடவும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும் தேவையான தரவுகளை அளித்திட வேண்டும் என மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

# தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் முன்னேற்பாடு பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்



தஞ்சாவூர், நவ.2

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் வருகிற 07.11.2024 தேதியன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வருகை தருவதையொட்டி உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தலைமையில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), க.அன்பழகன் (கும்பகோணம்), என்.அசோக்குமார் (பேராவூரணி), தஞ்சாவூர் மேயர் சண்.இராமநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மு.பாலகணேஷ், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, மாநகராட்சி துணை மேயர் அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்), சுப.தமிழழகன் (கும்பகோணம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் வழங்கப்படவுள்ள நலத்திட்ட விவரங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் கலந்தாலோசனை மேற்கொண்டார்கள்.

எனவே, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் விழாவிற்கான நலத்திட்ட உதவிகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு உயர்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்தார்

# 'பாரதத்தின் சிந்தனை மற்றும் அடையாளத்தை தமிழ்நாடு மகத்தான முறையில் வடிவமைத்துள்ளது' கவர்னர் ஆர்.என்.ரவி



சென்னை, நவ.3

தமிழ்நாடு மாநிலம் உருவான தினத்தையொட்டி, தமிழக மக்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கவர்னர் மாளிகையின் 'எக்ஸ்' வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு மாநிலம் உருவான தினத்தையொட்டி, நமது தமிழ்நாட்டு சகோதர சகோதரிகளுக்கு மனமார்ந்த நல்வாழ்த்துகள். தமிழ்நாடு, தனது வளமான ஆன்மிகம், கலாசாரம், இலக்கிய பாரம்பரியம் கொண்ட பாரதத்தின் சிந்தனை மற்றும் அடையாளத்தை மகத்தான முறையில் வடிவமைத்துள்ளது.

இந்த புனித பூமியின் முனிவர்கள், ஞானம் தேடுவோர், கவிஞர்கள் மற்றும் வீரம் மிக்க ஆட்சியாளர்கள் எல்லா காலங்களிலும், பாரதத்தின் ஆன்மாவை வளப்படுத்தி, அதன் அன்பு மற்றும் உலகளாவிய சகோதரத்துவத்தின் செய்தியை கடல் கடந்து கொண்டு சென்றுள்ளனர். இந்த மண்ணின் எண்ணற்ற தேசிய சுதந்திரப் போராட்ட வீரர்களின் அசைக்க முடியாத உறுதி மற்றும் அவர்களின் வீரமும், தியாகமும் நமது நாட்டின்சுதந்திரத்துக்கும், துடிப்பான ஜனநாயகத்துக்கும் வழிவகுத்துள்ளன.

இந்த நாளில், 2047க்குள் வளர்ச்சியடைந்த பாரதம் காண வழிவகுக்கும் தமிழ்நாட்டின் இணக்கமான விரிவான வளர்ச்சிக்காக உழைப்பதற்கான நமது ஈடுபாட்டை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வோம்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஊட்டி கேரட்டுக்கு அடிச்ச ஜாக்பாட்.. விலையை கேட்டா தலையே சுத்திரும்போல இருக்கே.. ஏன்னு பாருங்க

நீலகிரி,நவ.3

நீலகிரி மாவட்டத்துக்கு பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும், அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகத்தில் இருந்தும், வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் என தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் அதன் இயற்கை அழகை கண்டு ரசிக்க வந்து செல்கின்றனர். பண்டிகை, பள்ளி, கல்லூரி விடுமுறை, ஹனிமூன், குடும்பச் சுற்றுலா என்றாலே அனைவரது டாப் 10 லிஸ்டில் முதலிடம் பிடித்திருப்பது ஊட்டி, குன்னூராக த்தான் இருக்கும்.

அந்த அளவுக்கு எழில் கொஞ்சும் இயற்கை அமைப்பினை கொண்ட பகுதியாக விளங்கி வருகிறது. சிறுவர்களுக்கான பூங்காக்கள், தாவரவியல் பூங்கா, அருவிகள், காட்சி முனைகள் என சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அனைத்துப் பகுதிகளும் அமைந்திருக்கும். நீலகிரியின் மற்றொரு சிறப்பு மலை ரயில்.

மேட்டுப்பாளையம் முதல் குன்னூர் வரை நீராவி மூலமாகவும், குன்னூர் முதல் உதகை வரை டீசலிலும் இந்த மலை ரயில் இயக்கப்பட்டு வருகிறது. 108 வளைவுகள், 16 சுரங்கங்கள், 250 பாலங்கள் ஆகியவற்றை கடந்து செல்லும் இந்த மலை ரயிலில் இருந்து மலைகள், அடர்ந்த வனப் பகுதிகள், அருவிகள் என இயற்கைக் காட்சிகளைக் கண்டவாறே பயணம் மேற்கொள்ளும் அலாதியான அனுபவம் கிடைக்கும்.

நீலகிரி மாவட்டத்தின் பிரதான தொழிலாக மலைக் காய்கறி விவசாயமும், சுற்றுலா துறை தொழிலும் விளங்கி வருகிறது. நீலகிரியில் விளைவிக்கப்படும் கேரட், உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், முள்ளங்கி, பீட்ரூட் போன்ற காய்கறிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. மலைக் காய்கறி சாகுபடியில் கேரட் முக்கியப் பயிராக உள்ளது.

ஊட்டி, குன்னூருக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பலரும் இந்த கேரட்டுகளை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். ஊட்டி, குன்னூர், கோத்தகிரி உள்ளிட்ட பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் விவசாயிகள் கேரட் சாகுபடி செய்து வருகின்றனர். இந்த கேரட் தொழிலை சார்ந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் குடும்பங்கள் உள்ளன.

சென்னை, மேட்டுப்பாளையம் உள்ளிட்ட மொத்த ஏல மண்டிகளுக்கு இங்கு விளைவிக்கப்படும் கேரட் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. கிலோ 25 ரூபாய் முதல் 35 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வந்த கேரட் நேற்று முதல் கிடுகிடுவென விலை உயர்ந்து கிலோ ரூ. 110 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தீபாவளியையொட்டி இந்த திடீர் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

கேரட் அறுவடையைப் பொருத்தவரை ஏராளமான தொழிலாளர்கள் தேவை. தீபாவளி பண்டிகை காரணமாக தொழிலாளர்கள் பலரும் பண்டிகையைக் கொண்டாடுவதற்காக சென்றுவிட்டதால் மண்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. இதன் காரணமாக கேரட் வரத்து சரிந்துள்ளதால் தற்போது கிலோ 110 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த திடீர் விலை உயர்வால் நீலகிரி விவசாயிகள் செம்ம குஷியாக உள்ளனர். பண்டிகை முடிந்து தொழிலாளர்கள் வேலைக்கு வரும் நிலையில், மீண்டும் ஓரிரு நாட்களில் விலை சீரடைந்துவிடும் என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

# குற்றால அருவிகளில் குளிக்க தடை



தென்காசி, நவ.4

மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று இரவு பெய்த மழை காரணமாக தென்காசி மாவட்டம் குற்றால அருவிகளில் நீர்வரத்து அதிகரித்தது. இதன் காரணமாக இன்று காலை ஐந்தருவி, மெயின்அருவி, பழைய குற்றால அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

இதையடுத்து 5 மணிநேரம் களித்து அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இந்நிலையில், தற்போது மாலை நேரத்தில் தென்காசி, குற்றாலம், செங்கோட்டை, மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் மழை பெய்யத்தொடங்கியுள்ளது.

மழை பெய்து வருவதால் அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ஐந்தருவி, மெயின் அருவி, பழைய குற்றால அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி விடுமுறையை சுற்றுலா பயணிகள் குற்றாலத்தில் குவிந்துள்ள நிலையில் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதால் பலரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

# சிறு, குறு மற்றும் பெரிய அளவிலான தொழில் துவங்க கடன்: கலெக்டர் தகவல்

தென்காசி, நவ.2

தென்காசி மாவட்டத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றம் சிறுபான்மையின மக்கள் தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் வாயிலாக சிறு, குறு மற்றும் பெரிய அளவிலான தொழில் துவங்க கடன் வழங்கப்பட்டு வருகிறது.

தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் பின்வரும் தேதிகளில் 06.11.2024 தென்காசி கிளை, 08.11.2024 கடையநல்லூர் கிளை, 13.11.2024 சங்கரன்கோவில் கிளை, 15.11.2024 புளியங்குடி கிளை, 20.11.2024 செங்கோட்டை கிளை, 22.11.2024 சுரண்டை கிளை, 27.11.2024 வடகரை கிளை, 29.11.2024 வாசுதேவநல்லூர் கிளை, 04.12.2024 ஆலங்குளம் கிளை, 06.12.2024 கடையம் கிளை, 11.12.2024 சிவகிரி கிளை, 13.12.2024 திருவேங்கடம் கிளை, 18.12.2024 பாவூர்சத்திரம் கிளை, 20.12.2024 சுந்தரபாண்டியபுரம் கிளை, 27.12.2024 வெங்கடேஸ்வரபுரம் கிளை மற்றும் 03.01.2025 கரிவலம்வந்தநல்லூர் கிளையில் லோன் மேளா (கடன் திருவிழா) நடத்தப்படவுள்ளது.

எனவே பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றம் சிறுபான்மையின மக்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு கடன் பெற தேவையான உரிய ஆவணங்களை சமர்ப்பித்து கடன் பெற்று தொழில் துவங்கி பொருளாதார ரீதியாக பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

# மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தூய்மை பணியாளர்களுக்கான மறுவாழ்வு திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம்




மயிலாடுதுறை, நவ.3

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தூய்மை பணியாளர்களுக்கான மறுவாழ்வு திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் தேசிய தூய்மை பணியாளர் ஆணையத் தலைவர் மா.வெங்கடேசன் தலைமையில், மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி, முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் சுகாதாரம் தொடர்பான பொருள்கள் வழங்குதல் குடும்ப நலநிதி பிடித்தம் செய்தல் தொடர்பான பணிகள் குறித்தும், தூய்மை பணியாளர்களுக்கான மறுவாழ்வு திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்தும், தூய்மை பணியாளர்களின் நிறை, குறைகளை கேட்டறியவும் இக்கூட்டம் நடைபெற்றது.

புதை சாக்கடை பராமரிப்புக்கு இயந்திரத்தை கொண்டு தான் சுத்தம் செய்ய வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஒரு சில இடங்களில் இயந்திரங்களை பயன்படுத்த முடியாத நிலையில் மனிதர்களை பயன்படுத்த வேண்டும் என்றால் அதற்கான விதிமுறைகளை பின்பற்றபடுகிறதா என்று ஆணையம் கண்காணித்து வருகிறது. மேலும் தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், நிர்ணய தொகை, இ.பி.எப், இ.எஸ்,ஐ பிடித்தம் செய்யப்பட்ட விவரங்கள் தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்றும், ஒப்பந்ததாரர்கள் மூலம் வழங்கப்படும் உபகரணங்கள் நகராட்சி ஆணையர் கண்காணித்தல், பணி செய்யும் இடங்களில் பெண் சுகாதார பணியாளர்களுக்கு பாலியல் தொந்தரவு ஏற்பட்டால் புகார் தெரிவிக்க வேண்டுமெனவும், துப்புரவு பணியாளர்கள் குழு காப்பீட்டில் குறைந்தது ரூயஅ.10 இலட்சத்திற்கும் குறையாமல் ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும், தாட்கோ சார்பில் துப்புரவு பணியாளர்களுக்கு நலவாரிய அட்டை ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும், பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டத்தில் துப்புரவு பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும், துப்புரவு பணியாளர்களிடவும், துறை சார்ந்த அலுவலர்களிடமும் கேட்டறியப்பட்டது.

# மதுரை மாவட்டத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

மதுரை, நவ.3

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த அரசு அலுவலகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், சென்னை ஓய்வூதிய இயக்குநர் மதுரை மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறை தீர்க்கும் கூட்ட அரங்கில் வருகிற 11.12.2024 ஆம் தேதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடத்தப்பட உள்ளது. ஓய்வூதியதாரர்கள் தங்களுடைய ஓய்வூதிய பலன்கள் பெறுவதில் உள்ள குறைகளைக் குறிப்பிட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கீழ்கண்ட விபரக் குறிப்புகளுடன் 30.11.2024 ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மனுவின் மீது ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மனு என்று குறிப்பிட வேண்டும்.

1. விண்ணப்பம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் கண்டிப்பாக இரு நகல்கள் அனுப்பப்பட வேண்டும்.

2. ஓய்வூதியர் பெயர் (குடும்ப ஓய்வூதியம் பெற்று வந்தால் உறவுமுறை) குறிப்பிடப்பட வேண்டும்.

3. ஏற்கனவே ஓய்வூதியம் பெற்று வந்தால் அவை சம்பந்தமான விபரம் ஓய்வூதிய புத்தக எண் மற்றும் கருவூலத்தின் பெயர் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்.

4. ஓய்வூதியப் பிரேரணை சென்னை மாநில கணக்காயருக்கு அனுப்பப்பட்டிருந்தால் அதன் விபரம் குறிப்பிடப்பட வேண்டும். 5. ஓய்வூதிய பலன்கள் பெறுவது தொடர்பான கோரிக்கைகளை மட்டும் தெரிவித்து விண்ணப்பிக்கவும், கோரிக்கையின் விபரம் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். 6. ஓய்வூதியதாரர்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய அலுவலர் மற்றும் அலுவலகத்தின் முழு முகவரி, தொலைபேசி எண்ணுடன் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

மேலும், மதுரை மாவட்டத்திலுள்ள அரசு அலுவலகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். பிற மாவட்டங்களைச் சார்ந்த அரசு அலுவலகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள், அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் எனவே, இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து ஓய்வூதியர்களும் அன்றைய தினம் நடைபெறவுள்ள கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# பசும்பொன் முத்துராமலிங்க தேவர் குருபூஜையை முன்னிட்டு அரசு நலத்திட்ட உதவிகள்: அமைச்சர் வழங்கினார்



இராமநாதபுரம், நவ.3

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், பசும்பொன்னில் பசும்பொன் முத்துராமலிங்கதேவர் திருமகனார் 117வது பிறந்த நாள் விழா மற்றும் 62வது குருபூஜை விழாவையொட்டி, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.முருகேசன் அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள், தலைமையேற்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தியதுடன், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசுகையில்,

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் அனைவரது அன்பைபெற்ற மாபெரும் தலைவராக திகழ்ந்தவர் ஆவார்.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் பசும்பொன்னில் நடைபெறும் மூன்று நாள் விழாவிற்கு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வந்து செல்வதால் பொதுமக்களின் நலன் கருதி பசும்பொன்னில் இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பார்த்திபனூர் வழியாக பசும்பொன் வருவதற்கான சாலையில் பார்த்திபனூர் பகுதியில் இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பசும்பொன்னிற்கு சுற்றுப்புறச்சாலை மற்றும் பசும்பொன்னிலிருந்து கமுதிவரை புறவழிச்சாலை மற்றும் பசும்பொன்னில் பேவர் பிளாக் சாலை என எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சமூக நலத்துறையின் மூலம் 08 பயனாளிகளுக்கு 2 பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் மூலம் ரூ.4,00,000 மதிப்பீட்டிலும், தோட்டக்கலை துறையின் மூலம் 05 பயனாளிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் காய்கறி பரப்பு விரிவாக்கம் ரூ.3,87,560஼ மதிப்பீட்டிலும், வேளாண்மைத்துறையின் மூலம் 06 பயனாளிகளுக்கு பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் 2024-2025 திட்டத்தின் கீழ் ரூ.3,18,000஼ மதிப்பீட்டிலும், வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் 01 பயனாளிக்கு ரூ.3,14,088஼ மதிப்பீட்டிலும் என மொத்தம் 316 பயனாளிகளுக்கு ரூ.52,80,148 இலட்சம் மதிப்பீட்டிலும் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கினார்கள்.

# ஆலங்குளத்தில் சொத்துவரி நோட்டீசில் போலியாக கையெழுத்திட்டவர்கள் மீது நடவடிக்கை: எஸ்.பி.யிடம், பேரூராட்சி தலைவி புகார் மனு




ஆலங்குளம், நவ.3

தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் சொத்துவரி நோட்டீசில் போலியாக கையெழுத்திட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என எஸ்.பி.யிடம், பேரூராட்சி தலைவி புகார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆலங்குளம் பேரூராட்சி மன்ற தலைவி சுதாமோகன்லால் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசனிடம் அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது:

கடந்த 2022 2023ம் ஆண்டுக்கான சொத்துவரியை கேட்டு எனக்கு அப்போது ஆலங்குளத்தில் செயல் அலுவலராக பணியாற்றிய பூதப்பாண்டியன் என்பவர், எனது பெயரில் உள்ள வீட்டிற்கு சொத்துவரி நிலுவையில் உள்ளதாகவும், வரியை செலுத்த எனக்கு நோட்டீஸ் அனுப்பியும் நான் சொத்துவரி கட்டவில்லை என்றும் கூறி, இதன் அடிப்படையில் என் மீது உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தில் பொய் புகார் கொடுத்துள்ளனர். இதையடுத்து என் மீது நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குனருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த விவரம் தெரிந்து நான் செயல் அலுவலரிடம் கேட்டதற்கு நான் வரி செலுத்த கூறி நோட்டீஸ் அனுப்பியும், தாங்கள் வரி செலுத்தவில்லை என்றும் முறையாகத்தான் தங்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்று தெரிவித்தார்.

ஆனால் பேரூராட்சி சார்பில் எந்த ஒரு அறிவிப்பும், எனக்கு நேரிலும் தபால் மூலமும் கிடைக்கவில்லை. இதுகுறித்து நான் விசாரித்தபோது அப்போதைய செயல் அலுவலர் பூதப்பாண்டியன், இளநிலை உதவியாளர் சங்கரசுப்பிரமணியன், கவுன்சிலர் சுபாஷ் சந்திரபோஸ், ஒப்பந்த பணியாளர் எமராஜன் ஆகியோர் கூட்டாக சேர்ந்து போலியாக எனது கையெழுத்திட்டு அந்த நோட்டீசை பெற்றது போன்று பதிவு செய்துள்ளார்கள். எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தரிசு நிலத்தொகுப்பில் மரக்கன்றுகள் நடப்படப்பட்டு வரும் பணிகள் ஆய்வு

மதுரை, நவ.3

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், உறங்கான்பட்டி கிராமத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைத்துறை இணை இயக்குநர் சுப்புராஜா, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், தரிசு நிலத்தொகுப்பின் மூலம் கொய்யா எல் 49, எலுமிச்சை பிகேஎம் 1 ரக மரக்கன்றுகள் நடப்படப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைத்துறை இணை இயக்குநர் சுப்புராஜா தெரிவிக்கையில்:

நாட்டின் ஒட்டுமொத்த சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது. மக்களின் வாழ்வாதாரமாக திகழ்ந்து உணவு அளிப்பதோடு, வேலைவாய்ப்பு அளித்தல், தொழில்துறை முன்னேற்றம், பன்னாட்டு வாணிபம், வறுமை ஒழிப்பு என பல்வேறு இனங்களிலும் வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. தமிழ்நட்டில் ஊரகப் பகுதிகளில் 70% மக்களுக்கு வேளாண்மை தொழிலே வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. வேளாண்மையில் ஏற்படக்கூடிய எந்த ஒரு சிறு மாற்றமும் தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் தமிழ்நாடு அரசு வேளாண்மை தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. வேளாண் தொழிலை மேம்படுத்தி வேளாண் பெருமக்களின் உயர்வுக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் நிலவும் தட்பவெப்பம், மழையளவு மண்வளம் ஆகியவற்றிற்கு ஏற்ப பயிர் ரகங்களும் உற்பத்தியைப் பெருக்கிட நவீன தொழில்நுட்பங்களும் பரிந்துரைக்கப்படுகின்றன. உழவுத் தொழிலை தொடர்ந்து மேற்கொள்வோரை ஊக்குவிக்கும் விதமாக பல உன்னத திட்டங்கள் வேளாண் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, மதுரை மாவட்டத்தில் 20212022 ஆம் ஆண்டில் 58 கிராம பஞ்சாயத்துகளிலும், 202223 ஆம் ஆண்டில் 112 கிராம பஞ்சாயத்துகளிலும் என கடந்த இரண்டு நிதியாண்டுகளில் 170 கிராம பஞ்சாயத்துகளில் ரூ. 142.301 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண்மைதுறை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 78, 033 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 20212022 ஆம் ஆண்டு வேளாண்மை துறையின் மூலம் 13 வட்டாரம் 19 பகுதியில் 252 விவசாயிகளைக் கொண்ட 20 நிலத்தொகுப்பு உருவாக்கப்பட்டு வேளாண் பொறியியல்துறை மூலம் ஆழ்துளை கிணறு அமைத்து இலவச மின் இணைப்பு மற்றும் 1 சோலார் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தோட்டக்கலைதுறை சார்பாக கொய்யா, எலுமிச்சை, மா, முருங்கை, நாவல்ரக மரக்கன்றுகள்நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது என்று வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைத்துறை இணை இயக்குநர் திரு.சுப்புராஜா அவர்கள்தெரிவித்தார்.

# கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைந்த நாளையொட்டி, குமரி தந்தை மார்ஷல் நேசமணி சிலைக்கு கலெக்டர் மரியாதை



கன்னியாகுமரி, நவ.3

கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைந்த நாளை கொண்டாடும் வகையில் தமிழ்நாடு அரசின் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வேப்பமூடு பகுதியில் அமைந்துள்ள குமரி தந்தை மார்ஷல் நேசமணி திருவுருவ சிலைக்கு மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜி.பிரின்ஸ் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்

திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இருந்த கன்னியாகுமரி மாவட்டம், தாய்த்தமிழகத்துடன் இணைந்த நாளான நவம்பர் 1ஆம் தேதி அன்று அரசு விழாவாக கொண்டாடுவதற்கு தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்ததன் அடிப்படையில், தாய்தமிழகத்துடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைவதற்கு பாடுபட்டவர்களில் ஒருவரான குமரித் தந்தை மார்ஷல் நேசமணி மணிமண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இருந்தபோது நமது தாய்த்தமிழகத்தோடு கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட இன்றைய விளவங்கோடு, கல்குளம், அகஸ்தீஸ்வரம், தோவாளை, கிள்ளியூர், திருவட்டார் உள்ளிட்ட வட்டங்களை இணைப்பதற்கு அரும்பாடுபட்டவர்களில் குமரிதந்தை மார்ஷல் நேசமணி அவர்களின் பணி முக்கியமானது. மார்ஷல் நேசமணி அவர்களுடன் இணைந்து போராடியவர்களில் பொன்னப்பன் நாடார், குஞ்சன்நாடார், சைமன், தாணுலிங்க நாடார், சிதம்பரநாதன், சிதம்பரம்பிள்ளை, மாதேவன்பிள்ளை, டேனியல், ஹுசைன், அப்துல்காதர், டாக்டர். கிருஷ்ணன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்தியா விடுதலை பெற்ற பின்னரும், திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இருந்த குமரி மாவட்டத்தை, தமிழ்நாட்டுடன் இணைக்க பல போராட்டங்களை நடத்தியதன் விளைவாக, 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்டம், தாய்த்தமிழகத்துடன் இணைக்கப்பட்டது. இதனை நினைவுகூறும் வகையில், ஒவ்வொரு வருடமும் குமரி மாவட்டம் தாய்தமிழகத்துடன் இணைந்த நவம்பர் 1ஆம் தேதி அன்று கன்னியாகுமரி மாவட்டம், வேப்பமூடு பகுதியில் அமைந்துள்ள மார்ஷல் நேசமணி அவர்களின் மணிமண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மலர் தூவி, மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இன்று தமிழக அரசின் சார்பில் மார்ஷல் நேசமணி மணி திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் மேரி பிரின்சிலதா, உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் தேசிய ஒற்றுமை நாள் உறுதிமொழி ஏற்பு



பெரம்பலூர், நவ. 3

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு தலைமையில் தேசிய ஒற்றுமை நாள் உறுதிமொழி அனைத்து அரசு அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் 31ம் தேதி இந்தியாவின் இரும்பு மனிதர் என்றழைக்கப்படும் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த தினத்தை தேசிய ஒற்றுமை நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. 31.10.2024 அன்று தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அரசு விடுமுறையாக இருப்பதால் அரசு வேலை நாளான மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தலைமையில் இந்திய நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பையும் பேணுவதற்கு என்னையே உவந்தளிப்பேன் என்றும், இந்த நல்லியல்புகளை எனது நாட்டு மக்களிடையே பரப்புவதற்கு அயராது பாடுபடுவேன் என்று உளமார உறுதியளிக்கிறேன்.

சர்தார் வல்லபாய் பட்டேலின் தொலைநோக்குப் பார்வையாலும், நடவடிக்கைகளாலும், சாத்தியமாக்கப்பட்ட ஒன்றிணைந்த தேசத்தின் நல்லுணர்வினைப் பேண நான் இந்த உறுதிமொழியை ஏற்கிறேன். எனது நாட்டின் உள் பாதுகாப்பினை உறுதி செய்ய எனது பங்களிப்பினை நல்குவேன் என்றும் உளமார உறுதியளிக்கிறேன்; என்று அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ச.வைத்தியநாதன், மாவட்ட வழங்கல் அலுவலர் ச.சுந்தரராமன், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் கார்த்திக்கேயன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ரெ.சுரேஷ் குமார், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர்கள் பாரதிவளவன் (பொது), சிவா (குற்றவியல்) மற்றும் பல்வேறு அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



நீலகிரி மாவட்டம் உதகை ஏரியில் ரூ.7.51 கோடி மதிப்பீட்டில் தூர்வாரும் பணியினையும் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் உதகை ஏரியின் முகப்பில் திடக்கழிவுகளை நீக்கும் தானியங்கி எந்திரம் அமைக்கும் பணியினையும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார். உடன் அரசு தலைமை கொறடா ராமச்சந்திரன், கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி கௌசிக், நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் கோபி உள்பட பலர் உள்ளனர்.

# மகளின் பெயரை அறிவித்த நடிகை தீபிகா படுகோன்



தீபிகாபடுகோன்தமிழில் கோச்சடையான்படம் மூலம் அறிமுகமானார். இந்தியில் வெளியான ஓம் சாந்தி ஓம் படத்தின் மூலம் அறிமுகமான அவர் நடிகர் ஷாருக்கான் நடிப்பில் உருவான சென்னை எக்ஸ்பிரஸ் படத்தில் நடித்து பிரபலமானார்.

பாலிவுட்டில் நட்சத்திர ஜோடியாக வலம் வருபவர்கள் ரன்வீர் சிங் – தீபிகா படுகோன். திரையுலகில் இருவரும் இணைந்து நடித்து வந்த நிலையில், கடந்த 2018ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். இவர்களுடைய திருமணம் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. திரையுலகை சேர்ந்த பலரும் இதில் கலந்துகொண்டனர்.

திருமணம்செய்துகொண்டபின்பும்பலபடங்களில்நடித்தார். இறுதியாக கல்கி படம் வெளியானது. கருவுற்ற பின் கல்கியின் புரமோஷன் நிகழ்வுகளில் கலந்துகொண்டு வைரலானார். நிறைமாத கர்ப்பத்தில் இருந்த தீபிகா படுகோன் எடுத்த போட்டோஷூட் புகைப்படங்கள் இணையத்தில் வைரலானது. விநாயகர் சதுர்த்தி அன்று மும்பையிலுள்ள பிரபல மருத்துவமனையில் பிரசவத்திற்காக தீபிகா படுகோன் அனுமதிக்கப்பட்டார். பின், ஒருநாள் கழித்து தங்களுக்குப் பெண் குழந்தை பிறந்ததை தீபிகாவும் ரன்வீரும் இணைந்து அறிவித்தனர்.

நடிகைதீபிகாபடுகோனியின் பெண்குழந்தைக்கு 'துவாபடுகோனேசிங்' எனபெயர்சூட்டப்பட்டுள்ளது. தீபாவளியை முன்னிட்டு தங்களது பெண் குழந்தையின் புகைப்படத்தை தீபிகா படுகோன் ரன்வீர் சிங் தம்பதி முதன்முறையாக இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளனர். அந்த பதிவில், "துவா என்றால் பிரார்த்தனை என்று அர்த்தம். ஏனென்றால் எங்கள் பிரார்த்தனைகளுக்கான பதில் அவள். எங்கள் இதயம் முழுவதும் அன்பும் நன்றியுணர்வும் நிரம்பியுள்ளது" என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# 'அமரன்' படக்குழுவினரை நேரில் அழைத்து பாராட்டிய ரஜினிகாந்த்

நடிகர் சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவான அமரன் திரைப்படம் தீபாவளி வெளியீடாக அக்டோபர் 31ம் தேதி திரையரங்குகளில்வெளியானது. இந்தப்படத்தைநடிகர்கமல்ஹாசனின்ஆர்கேஎப்ஐதயாரிப்புநிறுவனம்தயாரித்துள்ளது. மறைந்த தமிழக ராணுவ மேஜர் முகுந்த் வரதராஜனின் வாழ்க்கையைத் தழுவி எடுக்கப்பட்ட இப்படம் ரசிகர்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இதில் சிவகார்த்திகேயன் மேஜர் முகுந்தாகவும், முகுந்தின் மனைவி இந்துவாக நடிகை சாய் பல்லவியும் நடித்துள்ளனர்.

உலகளவில் கிட்டதட்ட 900க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் 'அமரன்' திரைப்படம் வெளியாகின. திரையிட்ட இடங்களில் எல்லாம் அமரன் படத்திற்கு மகத்தான வரவேற்பு கிடைத்துள்ளது. இதற்கிடையே, இந்த படத்தின் சிறப்பு காட்சியை தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் தங்கம் தென்னரசு, நடிகர் சிவகார்த்திகேயன், இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி, பட தயாரிப்பாளர்கள் உள்ளிட்ட பலர் பார்த்து மகிழ்ந்தனர். தொடர்ந்து, முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் 'அமரன்' படத்தை பாராட்டினார்.

இத்திரைப்படம்வெளியானமுதல்நாளில்உலகளவில்42.3கோடிரூபாய்வசூலித்துள்ளதாகபடக்குழுஅறிவித்துள்ளது. இந்த நிலையில், அமரன் படத்தை பார்த்த நடிகர் ரஜினிகாந்த், படத்தின் தயாரிப்பாளரும், நடிகருமாக கமல்ஹாசனை தொலைபேசியில் அழைத்து பாராட்டினார். மேலும், நடிகர் சிவகார்த்திகேயன், இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி, தயாரிப்பாளர் ஆர். மகேந்திரன், ஒளிப்பதிவாளர் சாய் உள்ளிட்ட 'அமரன்' படக்குழுவினரை நேரில் அழைத்து பாராட்டியுள்ளார்.

படம் குறித்து பேசிய ரஜினிகாந்த், "முகுந்த் வரதராஜனின் வாழ்க்கையைப் படமாக எடுத்த ராஜ்கமல் நிறுவனத்துக்கு நன்றி. நடிகர் சிவகார்த்திகேயன் முகுந்த் வரதராஜன் கதாபாத்திரத்தில் வாழ்ந்திருக்கிறார். கிளைமாக்ஸில் என்னால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இப்படியான படத்தை எடுத்ததற்காகக் கமல்ஹாசனையும் இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமியையும் எவ்வளவு வாழ்த்தினாலும் தகும்." எனத் தெரிவித்துள்ளார்.

# லக்கி பாஸ்கர் படத்தின் 2 நாள் வசூல்: அதிகாரபூர்வ அறிவிப்பு

தமிழ், மலையாளம் மற்றும் தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நடிகர் துல்கர் சல்மான். இவர் மலையாள நடிகராக இருந்தாலும், இவரது திரைப்படங்களுக்கு தென்னிந்திய மொழிகளில் அதிக வரவேற்பு கிடைப்பது வழக்கமாகும். அவரது நடிப்பில் வெளியான சீதா ராமம் திரைப்படம் ஏகபோக வரவேற்பை பெற்றது. இதையடுத்து அவர் நடித்த கிங் ஆப் கோதா திரைப்படம் எதிர்பார்த்த வெற்றி அடையவில்லை. இதைத் தொடர்ந்து துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகி இருக்கும் புதிய திரைப்படம் தான் லக்கி பாஸ்கர். வெங்கி அட்லுரி இத்திரைப்படத்தை இயக்கி உள்ளார். இவர் தனுஷை வைத்து வாத்தி படம் இயக்கியவர் ஆவார். படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்தது. படத்தின் பின்னணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் படத்தை சித்தாரா என்டர்டெயின்மென்ட் நிறுவனமும் பார்ச்சூன் போர் சினிமாஸ் நிறுவனமும் இணைந்து தயாரிக்கிறது. இதில் துல்கர் சல்மான் உடன் இணைந்து மீனாட்சி சவுத்ரி நடிக்கிறார். ஜி.வி பிரகாஷ் இதற்கு இசை அமைத்துள்ளார். சமீபத்தில் 'லக்கி பாஸ்கர்' படத்தின் 'கொல்லாதே' பாடல் வெளியாகி வைரலானது. தீபாவளி வெளியீடாக அக்டோபர் 31ம் தேதி வெளியான இப்படம் ரசிகர்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. சாதாரண நபரான நாயகன் அரசு மற்றும் வங்கி நிர்வாகத்தை ஏமாற்றி பெரும் செல்வந்தனாக மாறும் கதையாக உருவான இப்படம், தெலுங்கு மற்றும் மலையாளத்தை முதன்மையாகக் குறிவைத்து உருவானாலும் தமிழிலும் கவனிக்கப்பட்டு வருகிறது., சென்னையில் படம் வெளியான முதல் நாளைவிட தற்போது கூடுதலாகக் காட்சிகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. பிரதர் மற்றும் பிளடி பெக்கர் படங்கள் கலவையான விமர்சனங்களைப் பெற்றதால் அப்படத்தின் திரைகளை அமரனும் லக்கி பாஸ்கரும் நிரப்பும் எனத் தெரிகிறது. இந்த நிலையில், லக்கி பாஸ்கர் திரைப்படம் முதல் 2 நாள்களில் உலகளவில் ரூ. 26.2 கோடியை வசூலித்துள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சாய் சுதர்சன் அபார சதம்.. ஆஸ்திரேலிய ஏ அணிக்கு 225 ரன்களை இலக்காக நிர்ணயித்த இந்தியா ஏ



இந்தியா ஏ ஆஸ்திரேலியா ஏ கிரிக்கெட் அணிகள் இடையிலான முதலாவது அதிகாரபூர்வமற்ற டெஸ்ட் (4 நாள் ஆட்டம்) போட்டி ஆஸ்திரேலியாவில்உள்ளமெக்கேநகரில்நேற்றுமுன்தினம்தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் முறையே இந்தியா ஏ அணி 107 ரன்னும், ஆஸ்திரேலியா ஏ 195 ரன்னும் எடுத்தன. இதனையடுத்து 88 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை தொடங்கிய இந்தியா ஏ அணி நேற்றைய ஆட்ட நேரம் முடிவில் 2 விக்கெட்டுக்கு 208 ரன்கள் அடித்திருந்தது. சாய் சுதர்சன் 96 ரன்களுடனும், தேவ்தத் படிக்கல் 80 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த சூழலில் இன்று 3வது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து பேட்டிங் செய்த இந்தியா ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே படிக்கலின் விக்கெட்டை இழந்தது. 88 ரன்களில் அவர் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சதத்தை பூர்த்தி செய்த சாய் சுதர்சன் 103 ரன்களில் ஆட்டமிழந்தார். இதன்பின் களமிறங்கிய வீரர்களில் இஷன் கிஷன் தவிர மற்ற வீரர்கள் தாக்குப்பிடிக்கவில்லை. முடிவில் இந்தியா ஏ 2வது இன்னிங்சில் 312 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு 225 ரன்களை இலக்காக நிர்ணயித்துள்ளது. ஆஸ்திரேலியா ஏ தரப்பில் பெர்குஸ் ஓ நெய்ல் 4 விக்கெட்டுகளும், மர்பி 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 225 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி ஆஸ்திரேலியா ஏ பேட்டிங் செய்து வருகிறது.

# டெஸ்ட் கிரிக்கெட்: நியூசிலாந்துக்கு எதிராக ஜெய்ஸ்வாலின் மாபெரும் சாதனையை தகர்த்த ரிஷப் பண்ட்



இந்தியாநியூசிலாந்து அணிகள் இடையிலான 3வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நேற்று தொடங்கியது. இந்தியஅணியில்காய்ச்சலால்அவதிப்படும்வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவுக்கு பதிலாக முகமது சிராஜ் இடம் பெற்றார்.

இதில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணியின் கேப்டன் டாம் லாதம் பேட்டிங் தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 235 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக டேரில் மிச்செல் 82 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் அபாரமாக பந்து வீசிய ஜடேஜா 5 விக்கெட்டுகளும், வாஷிங்டன் சுந்தர் 4 விக்கெட்டுகளும் வீழ்த்தி அசத்தினர்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா முதல் நாளில் 86 ரன்களுக்குள் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. கில் 31 ரன்களுடனும், பண்ட் 1 ரன்னுடனும் களத்தில் இருந்தனர்.

இந்நிலையில் 2வது நாள் ஆட்டம் இன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து பேட்டிங் செய்த இந்தியா தரப்பில் கில் நிதானமாக விளையாட மறுமுனையில் பண்ட் அதிரடி ஆட்டத்தை கடைபிடித்தார். இருவரும் அரைசதம் அடித்தனர். அதிலும் பண்ட் வெறும் 36 பந்துகளில் அரைசதம் அடித்தார்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் நியூசிலாந்துக்கு எதிராக குறைந்த பந்துகளில் அரைசதம் அடித்த இந்திய வீரர் என்ற ஜெய்ஸ்வாலின் (41 பந்துகள்) மாபெரும் சாதனையை தகர்த்துள்ள பண்ட் புதிய சாதனை படைத்துள்ளார்.

தற்போது வரை இந்திய அணி 4 விக்கெட்டுகளை இழந்து 169 ரன்கள் அடித்துள்ளது. கில் 61 ரன்களுடனும், பண்ட் 54 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

# எது நடக்க கூடாது என்று நினைத்தேனோ அது நடந்து விட்டது ஜடேஜா வருத்தம்

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் பெங்களூரு, புனேயில் நடந்த முதல் 2 ஆட்டங்களில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்று தொடரை 20 என்ற கணக்கில் கைப்பற்றி வரலாறு படைத்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நேற்று தொடங்கியது. இந்திய அணியில் காய்ச்சலால் அவதிப்படும் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவுக்கு பதிலாக முகமது சிராஜ் இடம் பெற்றார். இதில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணியின் கேப்டன் டாம் லாதம் பேட்டிங் தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 235 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக டேரில் மிச்செல் 82 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் அபாரமாக பந்து வீசிய ஜடேஜா 5 விக்கெட்டுகளும், வாஷிங்டன் சுந்தர் 4 விக்கெட்டுகளும் வீழ்த்தி அசத்தினர். இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா முதல் நாளில் 86 ரன்களுக்குள் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. கில் 31 ரன்களுடனும், பண்ட் 1 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். இந்நிலையில் 2வது நாள் ஆட்டம் இன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. முன்னதாக இந்த தொடரில் இந்திய அணி அடைந்த தோல்வி குறித்து பேசிய ரவீந்திரஜடேஜா கூறுகையில், "தனிப்பட்ட முறையில் நான் ஓய்வு பெறும் வரை இந்திய அணி இந்தியாவில் டெஸ்ட் தொடரை இழக்காது என்று நினைத்தேன். அந்த வகையிலேயே நாங்கள் தொடர்ச்சியாக 18 தொடர்களை இந்திய மண்ணில் வென்றோம். ஆனால் இந்த தொடரில் ஏற்பட்ட தோல்வி எனக்கு மிகவும் வருத்தம் அளித்து விட்டது. ஏனெனில் நான் ஓய்வு பெறும் வரை டெஸ்ட் தொடரை இந்திய அணி சொந்த மண்ணில் இழக்கக்கூடாது என்று நினைத்தேன். ஆனால் தற்போது அது நடந்து விட்டது. நாங்கள் எங்களின் மீது பெரிய எதிர்பார்ப்புகளை உருவாக்கி விட்டோம். 12 ஆண்டுகளாக எந்த ஒரு டெஸ்ட் தொடரையும் இழக்காமல் விளையாடி வந்த நாங்கள் இத்தனை ஆண்டுகளில் இந்தியாவில் 5 போட்டியில் மட்டுமே தோற்று இருக்கிறோம் என்று நினைக்கிறேன். இப்பொழுது இந்த தொடரில் அடைந்த தோல்வி எனக்கு நிறைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து நிச்சயம் நாங்கள் மீண்டு வருவோம்" என்று கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.